# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மாகாணமட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை - 2015
## வரலாறு

**தரம் - 09** **நேரம் : 2.00 மணித்தியாலங்கள்**

சுட்டெண்: ..............................................

புள்ளிகள் : 100

---

### பகுதி I

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1) கண்டியைக் கைப்பற்றிய பின்னர் கண்டியின் பிரதான நிரந்தர செயலாளராக நியமிக்கப்பட்டவர்.
i) ஜோன் டொயிலி ii) எகலப்பொல iii) கெப்பட்டிப்பொல iv) மொல்லிக்கொட

2) பிரட்டிக் நோர்த்தின் கண்டி மீதான படையெடுப்பின்போது கண்டியின் மன்னனான ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கன் பின்வாங்கிய இடங்கள்
i) மெதகமநுவர ii) வெல்லஸ iii) ஹங்குரன் கெத்தை iv) நுகரகலாவிய

3) 1848ஆம் ஆண்டு இரண்டாம் சுதந்திரக் கிளர்ச்சியின் போது “மாத்தறை மெக்டோவல்” கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டவர்
i) கொங்காலகொடபண்டா ii) வீரபுரன் அப்பு
iii) கடகப்பொல தேரர் iv) வாரியப் பொல ஸ்ரீ சுமங்கலதேரர்

Education கல்வி அධ්‍යාපන

4) கண்ணுச்சாமியை ஆட்சியாளனாக்கிய மகா அதிகாரம்
i) மடுகல் திஸாவை ii) திம்புலான திஸாவை
iii) கெப்பட்டிப்பொல iv) பிலிமத்தலாவ

5) கோல்புறூக்கமரன் யாப்பு சீர்திருத்தம் யாரிடம் அங்கீகாரம் பெறப்பட்டது.
i) ரொபட் வில்மட் ஹோர்ட்டன் ii) கொட்ரிச் பிரபு
iii) மெகன்ஸி iv) பிரட்டிக் நோர்த்

6) சர்வசன வாக்குரிமையை வழங்குவதற்குச் சாதகமாகக் கருத்துக் கூறியவர்
i) சேர். பொன். இராமநாதன் ii) ஜேம்ஸ் பீரிஸ்
iii) A.E. குணசிங்க iv) S.A. விக்கிரமசிங்க

7) இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் எந்த அரசியல் யாப்பின்கீழ் இடம்பெற்றது.
i) சோல்பரி ii) டொனமூர்
iii) 1ம் குடியரசு iv) குறூமக்கலம்

8) டொனமூர் யாப்பில் தொழில், கைத்தொழில், வர்த்தக நிர்வாகக் குழுத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர்.
i) D.S. சேனாநாயக்க ii) C.W.W. கன்னங்கரா iii) D.P. பானபொக்க iv) P.சுந்தரம்

9) யாழ்ப்பாணம் உட்பட வடபகுதி முழுவதும் சிறப்பாக இயங்கிய மிசனரி.
i) பப்டிஸ்ட் மிசனரி ii) வெஸ்லியன் மிஷனரி
iii) அமெரிக்கன் மிஷனரி iv) சேர்ச் மிஷனரி



kalvi.lk

10) ‘அ’ பகுதியில் உள்ள நபர்களுடன் ‘ஆ’ பகுதியில் உள்ள பத்திரிகைகளை இணைக்கும் போது வரும் விடைத்தொகுதி

| அ | ஆ |
|---|---|
| 1) ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கலதேரர் | A) முஸ்லிம் நேசன் |
| 2) அநாகரிக தர்மபால | B) சரசவி சந்தேசய |
| 3) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் | C) லங்கா லோகய |
| 4) சித்திலெப்பை | D) சிங்கள பௌத்தாய |

i) CDBA  ii) DBCA  iii) CBDA  iv) ABCD

11) ‘அ’ பகுதியின் அமைப்புக்களுடன் ‘ஆ’ பகுதியின் நபர்களை இணைக்கும் போது வரும் சரியான விடைத்தொகுதி

| அ | ஆ |
|---|---|
| 1) இலங்கை தேசிய காங்கிரஸ் | A) S.W.A.R. பண்டாரநாயக்க |
| 2) இலங்கை தொழிலாளர் இயக்கம் | B) A.E. குணசிங்க |
| 3) கொமினிசியக் கட்சி | C) சேர். பொன். அருணாசலம் |
| 4) சுதந்திரக் கட்சி | D) S.A. விக்கிரமசிங்க |

i) CDBA  ii) CBDA  iii) BCAD  iv) BACD

12) இலங்கையின் தேசபிதா எனப் போற்றப்படுபவர்
i) டட்லி சேனாநாயக்க  ii) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
iii) D.S. சேனாநாயக்க  iv) J.R. ஜெயவர்த்தன

13) 1954இல் கொழும்புத்திட்ட மகா நாட்டைக் கூட்டிய பிரதமர்
i) பண்டாரநாயக்க  ii) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
iii) டட்லி சேனாநாயக்க  iv) கொத்தலாவல

14) 1972ஆம் ஆண்டு 1ம் குடியரசு யாப்பில் சட்டமன்றம் விசேடமாக எவ்வாறு அழைக்கப்பட்டது.
i) அரசக் கழகம்  ii) தேசிய அரசுப் பேரவை  iii) ஈரங்கப் பாராளுமன்றம்  iv) செனெட்

15) இலங்கையின் முதலாவது ஜனாதிபதி
i) J.R.ஜெயவர்த்தன  ii) பிறேமதாச
iii) வில்லியம் கொபல்லாவ  iv) D.P.விஜயதுங்க

16) 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறை
i) இனவாரி பிரதிநிதித்துவமுறை  ii) தொகுதிவாரி பிரதிநிதித்துவம்
iii) விகிதாசார பிரதிநிதித்துவம்  iv) பிரதேசவாரி பிரதிநிதித்துவம்

17) இலங்கை சமவுடமை இயக்கத்தின் தந்தையாகவும் “பொரளுகொட சிங்கம்” எனவும் அழைக்கப்பட்ட தலைவர்
i) பிலிப் குணவர்த்தன  ii) A.E.குணசிங்க  iii) S.A. விக்கிரமசிங்க  iv) N.M. பெரேரா

18) கைத்தொழில் புரட்சி முதலில் ஏற்பட்ட நாடு
i) பிரான்ஸ்  ii) ஸ்பானியா  iii) போர்த்துக்கல்  iv) பிரித்தானியா

19) மத்திய தரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் கால்வாய்
i) பனாமாக் கால்வாய்  ii) சுயஸ் கால்வாய்
iii) மகலன் தொடுகடல்  iv) கீல் கால்வாய்

20) 2ம் உலகமகா யுத்தத்தின் பின்னர் உலக சமாதானத்தை ஏற்படுத்த உருவாக்கப்பட்ட அமைப்பு
i) சர்வதேச சங்கம்  ii) அணிசேரா இயக்கம்
iii) பொதுநலவாயம்  iv) ஐக்கிய நாடுகள் சபை

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) அ) i) கணிப்பீட்டில் ஈடுபடும் போது ஆசிரியர் வழங்கிய இரு ஆலோசனைகளைத் தருக.

ii) கணிப்பீட்டிற்குப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டு தருக.

iii) கணிப்பீட்டை மேற்கொண்ட போது எதிர்நோக்கிய சவால்கள் இரண்டு தருக.

(2 + 2 + 2 = 06 புள்ளிகள்)

ஆ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைப் பயன்படுத்தி கீழ் உள்ள கூற்றுக்குப் பொருத்தமான இடங்களைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்துக்களை எழுதுக.

i) பிரித்தானியரின் நிர்வாக மையத்தைக் குறிக்கும் எழுத்து


ii) 1818ஆம் ஆண்டு கிளர்ச்சி ஆரம்பித்த இடத்தைக் குறிக்கும் எழுத்து

iii) ரொபேட் பிரவுண்றிக்கால் கைப்பற்றப்பட்ட நகரம்

iv) கோல்புறூக்கின் மாகாணப் பிரிவின் தெற்கு மாகாணத்தின் நிர்வாக மையம்

v) 1871ஆம் ஆண்டு விவாதம் இடம்பெற்ற இடம்

vi) இலங்கையின் நீளமான நதியைக் குறிக்கும் எழுத்து




(06 புள்ளிகள்)



kalvi.lk

02) i) 1848ஆம் ஆண்டு விவசாயக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய மூவரைத் தருக.

ii) பிரட்டிக் நோர்த்தின் சீர்திருத்தங்கள் நான்கு தருக.

iii) இலங்கை மீது பிரித்தானியர் கவனம் செலுத்தியமைக்கான மூன்று காரணங்களைக் குறிப்பிட்டு ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

03) i) பின்வரும் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட யாப்பு சீர்திருத்தங்களைத் தருக.

A. 1910
B. 1924
C. 1947

ii) பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான யாப்பு சீர்திருத்தங்களை எழுதுக.

A. இரு சபை கொண்ட பாராளுமன்றம்
B. ஆங்கிலக் கல்வி அரச கொள்கையாக ஏற்றுக்கொள்ளல்
C. சட்டவாக்கக் கழக உறுப்பினர் எண்ணிக்கை 37
D. அடிப்படை உரிமைகள் முதலில் சேர்க்கப்பட்ட யாப்பு

iii) டொனமூர் யாப்பில் கூறப்பட்ட முக்கிய விடயங்கள் மூன்றைக் கூறி ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

04) i) பின்வரும் கூற்றுக்களோடு தொடர்புடைய நபர்களை எழுதுக.

அ) உண்மையை விடச் சிறந்த சமயம் இல்லை
ஆ) என்னுடைய நோக்கம் தாய் நாட்டுக்குச் சேவை செய்வதே தவிர புகழ் தேடுவதல்ல.
இ) புத்தகாயாவை மீட்பதற்காக எனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பேன்.

ii) இலங்கைத் தேசிய காங்கிரஸ் தனது நோக்கங்களை அடைவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் நான்கு தருக.

iii) 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெறுவதற்குச் சிறப்பாகப் பணியாற்றிய தலைவர்கள் இருவரைக் குறிப்பிட்டு, ஒருவரின் பணியை சுருக்கமாக விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

05) i) 1947ஆம் ஆண்டு பிரித்தானியருடன் டி.எஸ். சேனாநாயக்க கைச்சாத்திட்ட மூன்று ஒப்பந்தங்களையும் குறிப்பிடுக.

ii) இலங்கையின் ஆளுநர் நாயகமாகப் பதவிவகித்த நால்வரையும் கால ஒழுங்கில் குறிப்பிடுக.

iii) நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

06) i) இரண்டாம் உலகமகா யுத்தத்திற்கான உடனடிக்காரணத்தைக் குறிப்பிடுக.

ii) ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் நான்கினைத் தருக.

iii) சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page